7. அறிக்கைகள் அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கையை அளித்தல், திரு. இரா. அப்பு நடேசன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் *1993–94* ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் *36*-வது மற்றும் *37*-வது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ). சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1994 ஆம் ஆண்டு சென்னைப் பகலைக்கழகம், மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1994).* மாண்புமிகு கல்வியமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1994)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11.45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு சட்டமுன்வடிவுகளும் ஒத்த பொருளுடையதாக இருப்பதாலும், ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கின்ற காரணத்தினாலும், அடுத்த சட்டமுன்வடிவும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதிலே கலந்துகொண்டு பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு சட்டமுன்வடிவுகள் மீதும் தங்களுடைய கருத்துக்களை வழங்கலாம். இறுதியில் பிரிவுவாரியாக ஆய்வுக்குக் எடுத்துக்கொள்ளப்படுகிற போது, தனித்தனியே அமைச்சர் அவர்கள் முன்மொழிந்து பிரிவுவாரியாக தனித்தனியே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[@] *4-1-1994* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.